8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

16. பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு சேவையினை சென்னை கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஏற்படுத்திக் கொள்ளலாம் என அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 15–9–2010 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 363–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

17. முல்லைப் பெரியாறு அணையின் பிரதான அணை மற்றும் சிற்றணைகளின் பாதுகாப்பு மற்றும் நிலநடுக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை முப்பரிமாண வரையறுக்கப்பட்ட தனிமம் முறையில் ஆய்வினை மேற்கொள்ள ஆலோசகரை நியமித்து அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 13–10–2010 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 393–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

18. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS